Tamilisch

# Die Schulsozialarbeit
## பாடசாலைச் சமூகநலவேலை

பாடசாலைச் சமூகநலவேலையானது, அரசினர்பாடசாலையின் ஒரு சேவை வாய்ப்பாகும். பாடசாலைச் சமூகநலவேலையின் சேவையை, பெற்றோர், பிள்ளைகள், இளைஞர்கள், ஆசிரியர்கள், பாடசாலைத்தலைமையாசிரியர்கள், நிர்வாகப்பணிமனை அங்கத்தவர்கள் அனைவரும் செலவில்லாமல் பெற முடியும்.

பாடசாலைச் சமூகநலப்பணியாளர்கள் சமூக, பிள்ளைவளர்ப்பு சம்பந்தமான பிரச்சினைகள், சிரமங்களின் போது ஆலோசனை வழங்குதல், துணையாக வழிநடத்துதல் என்பவற்றுடன் ஏனைய பாடசாலைச்சேவைகள் அல்லது உதவி வாய்ப்புக்களைப் பெறுவதற்குத் தொடர்பாளர்களாகவும் இருப்பர்.

பாடசாலைக்குள்ளே இருக்கும் இந்த பாடசாலை சமூகநலவேலைக் காரியாலயம் அனைவருக்கும் திறந்திருக்கும்; அதாவது பிள்ளைகளும் இளைஞரும் இலகுவாக அங்கு செல்ல முடிவதுடன், காத்திருக்கும் நேரமும் குறைவாக இருக்கும்.

மாணவ மாணவிகளின் தனிப்பட்ட, பாடசாலை, சமூக சம்பந்தமான நல்வாழ்வை மேம்படுத்தும் அதேநேரம், ஆசிரியர்களின் வேலையில் அவர்களுக்கு ஆதரவளிப்பதும் பாடசாலைச் சமூகநலவேலையின் நோக்கமாகும். பாடசாலைச் சமூகநலவேலை வெவ்வேறு பிரிவுகளில் தலையீடு, செயற்பாடு என்பதனூடாக, பாடசாலையின் அபிவிருத்திக்காகத் தொடர்ந்து தனது பங்களிப்பை வழங்குகின்றது.

பாடசாலைச் சமூகநலப்பணியாளர்கள் சமூகநலவேலை (சமூகஅறிவியல், சமூகநலவேலை அல்லது சமூகக்கலாச்சார நகர்வு) என்னும் ஒரு கற்கைநெறியைக் கற்று முடித்திருப்பதுடன், இளைஞர்களுடனும் பெற்றோருடனும் வேலை செய்வதிலும், ஆலோசனை வழங்குதலிலும் வேலையனுபவத்தைக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், முறையாக ஆலோசனை வழங்குதலில் அதற்கான மேலதிக கற்கைநெறிகளையும் கற்றிருப்பர்.

சித்திரை 2010